இல்லங்களுக்கான கட்டடங்களைக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

106. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர் விடுதிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்த ஏழை மாணவர்களின் நலன் கருதி மாணவர் ஒருவருக்கு, திங்களொன்றுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையை ரூபாய் 225-லிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

107. இம்மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் நிதிநிலை பயிர்த்தொழில் மூலம் மேன்மையுறும் வகையில் வேளாண் துறையின் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ், சத்துள்ள புன்செய்ப் பயிர்களான கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, சாமை மற்றும் தினை மற்றும் சில பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க இவ்வரசு கருதியுள்ளது.

108. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியின் அளவு, அம்மக்களின் மொத்த மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சாதனைகள் குறித்து கால முறைப்படி தொடர்ந்து ஆய்வு செய்யவும் இவ்வரசு கருதியுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக, மத்திய அரசிடமிருந்து அதிக நிதியுதவியைப் பெற்றுத் தரும் வகையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (TAHDCO) மாற்றியமைக்கப்படும்.

109. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, அவர்கள் சுய வேலைவாய்ப்புகளைத் தொடங்குவதற்கு உதவக்கூடிய வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை அளிக்க இவ்வரசு கருதியுள்ளது.

110. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக, ரூபாய் 19.63 கோடி செலவில் 43 மாணவர் விடுதிகளைக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது. இதற்காகும் செலவு, மத்திய